Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk
MONDAY, MAY 22, 2023

திங்கட்கிழமை மே 22, 2023 | ஒளி: 09 கதிர்: 001 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE

## 1,000 பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் தளரும்



சுமார் 1,000 பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்குவது குறித்து நிதி அமைச்சு பரிசீலித்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க உறுதிப்படுத்தியுள்ளார்.

தொடர்ச்சி P2

பிச்சைக்காரர்களாக அல்ல

# கண்ணியமாக வாழ விரும்புகின்றனர்

### கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை செப்டெம்பருக்குள் வெற்றியடைய செய்வோம்



எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள், நமது நாட்டின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றியடையச் செய்து, பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கேகாலை அரநாயக்க 'அசுபினி எல்ல நீர் விநியோகத் திட்டம்' பொது மக்களிடம் கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (20) இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"2018 இல், பிரதமராக இருந்தபோது, இந்தக் குடிநீர் திட்டத்துக்கு அடிக்கல் நாட்ட வந்தேன். இன்று ஜனாதிபதி என்ற ரீதியில் அந்த நீர் திட்டத்தை திறந்துவைக்க வருவதை பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். இந்தத் திட்டத்தை நிறைவு செய்ய முடிந்ததில் மகிழ்ச்சியடைகிறேன்.

கபீர் ஹசீம் அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டம், அடுத்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டது. அமைச்சர் ஜீவன் தொண்டமானின் பதவிக் காலத்தில் நிறைவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



வங்குரோத்தில் இருந்து

## ஜனாதிபதியே மீட்டெடுத்தார்

### அனைவரையும் ஒத்துழைக்குமாறு அமைச்சர் ஜீவன் அழைப்பு

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து ஜனாதிபதியே மீட்டெடுத்தார் என்றும் எமது நாட்டை அவர் சிறந்த நிலைக்கு கொண்டுவருவார் என்ற நம்பிக்கை உள்ளது என்றும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

கைவிடப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு ஏதுவான நிலைக்கு அவர் நாட்டை கொண்டு வந்துள்ளார் என்று தெரிவித்த அமைச்சர், ஜனாதிபதியின் வேலைத்திட்டங்களுக்கு கட்சி பேதமின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2



மலையக மக்களுக்கு

## சகல உரிமைகளும் கிடைக்க வேண்டும்

எஸ்.கே. குமார், ஆர். ரமேஷ்

மலையக மக்களை ஒரு தனித் தேசிய இனமாக பிரகடனப்படுத்தி, தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கி, ஏனைய சமூகங்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் சகல உரிமைகளும் மலையக மக்களுக்கும் கிடைப்பதற்காக ஆவன செய்யப்பட வேண்டும் என்று சமூக செயற்பாட்டாளரான பீ. கௌதமன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



## ஜனாதிபதிக்கு அஸ்கிரிய பீடம் விசேட குறிப்பாணை

ஷேன் செனவிரத்ன

நாட்டில் இனவாத மற்றும் மதவாத நெருக்கடி நிலை உருவாகி வருவதை, தீவின் பல்வேறு பகுதிகளில் இருந்து எழும் சம்பவங்கள் மூலம் தெரியவருவதால், இவ்வாறான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## சீனக்குடாவுக்கு விஜயம்



சீன யுனான் ஆளுநர் வாங் யூபோ, தூதர் குய் மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் அதிகாரிகளுடன் திருகோணமலை துறைமுகத்திற்கு (சீனக் குடா) விஜயம் செய்தார். இங்கு சர்வதேச வளர்ச்சி ஒத்துழைப்பு குறித்து விவாதிக்கப்பட்டது.

1405 முதல் 1433 வரை, அட்மிரல் ஜெங் ஹீ (யுனானில் பிறந்தார்) பலமுறை சீன விரிகுடாவில் தனது கடற்படைகளை நிறுத்தினார்.

## ஜப்பான் பறக்கிறார் ஜனாதிபதி ரணில்



இலங்கையின் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில் உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களை மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்றையதினம் (22) நாட்டை விட்டு வெளியேறவுள்ளார்.


சிங்கப்பூர் மற்றும் ஜப்பானுக்கான உத்தியோகபூர்வ விஜயங்களை மேற்கொள்ளவுள்ள அவர், இரு நாடுகளின் பிரதமர்களையும் சந்திக்கவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சி P2

எக்ஸ்பிரஸ் பேர்ள் விவகாரம்

## லண்டன் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம்

### சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை



எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் விபத்தால் இலங்கையின் கடல் வளங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கான இழப்பீடு கோரிய வழக்கில், இழப்பீட்டு வரம்புகள் குறித்து இங்கிலாந்தின் லண்டன் நீதிமன்றத்தில் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டாலும் அது இங்கிலாந்து நீதிமன்றம் வழங்கிய இழப்பீட்டுக்கு உட்பட்டதாக அமையும் என்பதால் இதுகுறித்து இலங்கிலாந்தின் சட்ட நிபுணர்களிடம் ஆலோசனை பெறவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

கிளிநொச்சியில்

## 500 கிலோ விமான குண்டு மீட்பு



தாக்குதல் விமானத்தின் ஊடாக பூமிக்கு கொட்டப்பட்ட சுமார் 500 கிலோ கிராம் நிறையுடைய அதிசக்திவாய்ந்த விமானக் குண்டொன்று, கிளிநொச்சி, தர்மபுரம், மயில்வானகம் காட்டுப்பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ஆளுநர்களாக மூவரை முன்மொழிந்தது மொட்டு




ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவால் புதிதாக நியமிக்கப்படவுள்ள ஆளுநர் பதவிக்கு மூன்று பெயர்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தற்போதுள்ள ஆளுநர்களை மாற்ற வேண்டாம் என்று ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## நீலக்கல்லுக்கு பதிலாக கண்ணாடி கல்லை வைத்துவிட்டு மாயம்

ஷேன் செனவிரத்ன



கண்டி, பேராதனை வீதியிலுள்ள வெளிநாட்டவர்களுக்கு மாணிக்கக் கற்களை விற்பனை செய்யும் பிரபல விற்பனை நிலையத்துக்கு வந்த மூவர், 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான நீல மாணிக்கக் கல்லை பரிசோதிப்பதாக கூறி, போலியான நீலக் கண்ணாடி கல்லை வைத்துச் சென்ற சம்பவம் தொடர்பில் கண்டி தலைமையக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## ஆணைக்குழுக்கள் நாட்டுக்கு எதற்கு?

### மரிக்கார் எம்.பி கேள்வி

தேர்தல் ஆணைக்குழுவை சுயாதீமாக இயங்கவிடாத அரசாங்கம், இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரை பதவி நீக்கம் செய்ய பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ளதாகத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி தேசிய அமைப்பாளரும் ஊடகப் பேச்சாளருமான பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம்.மரிக்கார், இந்நாட்டுக்கு ஆணைக்குழுக்கள் தேவையா என்று கேள்வியெழுப்பினார்.

தொடர்ச்சி P2

## சொக்கலேட் கொடுத்து மாணவியை கடத்த முயற்சி



பிரசித்திபெற்ற பாடசாலையில் தரம் 6இல் கல்வி பயிலும் 10 வயது சிறுமியான மாணவியை, வானொன்றில் பலவந்தமாக ஏற்றி, கடத்திச் செல்வதற்கு முயன்ற சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்வதற்கான விசேட விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பண்டாரவளை பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (21) தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

தாயார் முன்னிலையில்

## மகளை நிர்வாணமாக்கி பாலியல் தொந்தரவு

### கான்ஸ்டபிளை தேடுகிறது பொலிஸ்

தாயின் முன்னிலையில் 26 வயதான மாற்றுத்திறனாளியான மகளை நிர்வாணமாக்கி, அப்பெண்ணுக்கு பாலியல் தொந்தரவு கொடுத்தது மட்டுமன்றி, கடுமையாகத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் கீழ், பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்வதற்கான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என கொஸ்கம பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்வதற்கு தேடப்பட்டுக்கொண்டிருக்கும் பொலிஸ் கான்ஸ்டபிள், வாழைத்தோட்ட பொலிஸில் இணைக்கப்பட்டு, கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத்தில் கடமையாற்றுகின்றார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கண்ணியமாக வாழ விரும்புகின்றனர்

இன்று ஆரம்பிக்கப்படும் இந்தக் குடிநீர் திட்டத்தால் சுமார் இரண்டு இலட்சம் மக்களின் குடிநீர் தேவை பூர்த்தியாகும். இந்தக் குடிநீர் திட்டத்திற்கு உதவிய அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த காலங்களில் இலங்கை வங்குரோத்து நாடாக அறிவிக்கப்பட்ட பின்னர் முதலீட்டாளர்கள் எவரும் நாட்டுக்கு வரவில்லை. நாட்டில் இருந்த முதலீட்டாளர்களும் நாட்டை விட்டு வெளியேறினர். அவ்வாறான சூழலில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு உதவிகளை வழங்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை.

இவ்வாறான சூழ்நிலையில் நான் நாட்டின் பொறுப்பை ஏற்று, சர்வதேச நாணய நிதியத்திற்கு சென்று நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுத்துள்ளேன்.

ஏனென்றால் சிங்களவராக இருந்தாலும் சரி, தமிழராக இருந்தாலும் சரி, மக்கள் பிச்சைக்காரர்களாக வாழ விரும்புவதில்லை. அவர்கள் பெருமையுடன் கண்ணியமாக வாழவே விரும்புகிறார்கள்.

சர்வதேச நாணய நிதியம் எமக்கு கடினமான நிபந்தனைகளை விதித்திருந்தது. ஆனால் எங்களுக்கு வேறு மாற்று வழிகள் இருக்கவில்லை. இதற்கு முன்னரும் சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் இதே போன்ற நிபந்தனைகள் முன்வைக்கப்பட்டன.

அங்கு ஓர் அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடனான கொடுக்கல் வாங்கல்களில் இருந்து விலகியது. ஆனால் நாம் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சென்று சரியான முகாமைத்துவத்துடன் இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறோம்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்துக்குள், நமது நாட்டின் கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றியடையச் செய்து, பொருளாதாரத்தை ஒரு குறிப்பிட்ட ஸ்திரமான நிலைக்கு கொண்டு வர முடியும். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றியுள்ளோம்.

இன்று பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களும் ஐக்கிய தேசிய கட்சியின் பொருளாதாரக் கொள்கைக்கு தமது விருப்பத்தை வெளிப்படுத்தி தேவையான ஆதரவை வழங்கியுள்ளனர்.

இந்த நாடு அடைந்துள்ள பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள வேண்டுமானால் அந்த ஆதரவு மிகவும் முக்கியமானது. வங்குரோத்து நிலையிலிருந்து விடுபட்டு கௌரவமாக வாழக்கூடிய நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்" என்றார்.

# சகல உரிமைகளும் கிடைக்க வேண்டும்

'மலையகம் 200' என்ற தொனிப்பொருளில் நுவரெலியாவில் கடந்த மூன்று தினங்களாக நடைபெற்ற நடைபெற்ற நிகழ்வின் இறுதி நாளாகிய ஞாயிற்றுக்கிழமை (21) நுவரெலியா புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியாளர் சந்திப்பின் போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு தீர்மானங்கள் தொடர்பாக மேலும் தெரிவித்த அவர், மலையக பெருந்தோட்ட மக்கள் குடியிருக்கும் காணியும் குடியிருப்புகளும் கிராமங்களாக மாற்றப்பட்டு அவர்களுக்கு சொந்தமாக்கப்பட வேண்டும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் 40 வருட காலம் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு நாடற்றவர்களாக இந்த நாட்டில் வாழ்ந்துள்ளோம். ஏனைய சமூகங்களை பார்க்கும் பொழுது எமது மலையக சமூகம் பின்தங்கி சமூகமாக வாழ்ந்து வருகின்றது. அவற்றை நிவர்த்தி செய்வதற்காக தீவிர திட்டம் ஒன்றை அரசாங்கம் வடிவமைத்து அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதனை அரசாங்கம் வடிவமைக்கும் பொழுது இவ்வவளவு காலம் அரசாங்கத்தால் புறக்கணிக்கப் பட்டிருந்த இந்தச் சமூகத்தின் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டும். அதில் விசேடமாக மலையக மக்களுக்கான காணி உரிமை குடியிருப்புகளும் உறுதி செய்யப்படவேண்டும்.

தோட்டப்பகுதியிலுள்ள அனைத்து வைத்தியசாலைகளையும் வைத்திய நிலையங்களும் அரசாங்கம் பொறுப்பேற்று சுகாதார அமைச்சின் கீழ் கொண்டு வந்து தேவையான வைத்திய சேவைகளை செய்து கொடுக்க வேண்டும்.

பெருந்தோட்ட பகுதியிலுள்ள பாடசாலைகளுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தொழிற்நுட்பம் பாடங்களுக்கு தகுதி வாய்ந்த ஆசிரியர்களை நியமித்து தேசிய பாடசாலைகளாக மாற்ற வேண்டும்.

தொழில்நுட்ப கல்லூரிகள் உருவாக்கி தமிழ் மொழியில் கற்பிக்க நடவடிக்கை எடுப்பதுடன், நுவரெலியாவில் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்பட வேண்டும் என்றார்.

# 500 கிலோ விமான குண்டு மீட்பு

யுத்தக்காலத்தில் பயங்கரவாதிகளை இலக்குவைத்து கிபீர் விமானத்தால் கீழே கொட்டப்பட்ட வெடிக்காத குண்டே இவ்வாறு கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேசவாசியால் தர்மபுரம் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு வழங்கிய தகவல்களின் அடிப்படையிலேயே இந்தச் சக்திவாய்ந்த குண்டு கண்டறியப்பட்டுள்ளது.

3 அடி நீளமும், 3 அடி சுற்றுவட்டமும் கொண்ட இந்தக் குண்டு, இற்றைக்கு 15 வருடங்களுக்கு முன்னர் பூமியை நோக்கி கொட்டப்பட்டுள்ளது. பூமிக்கு அடியில் அக்குண்டு பதிந்தமையால், இரும்புக்கறள் பிடித்துள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சொக்கலேட் கொடுத்து...

பண்டாரவளை நகரில் பிரசித்தி பெற்ற பாடசாலையில் கல்வி பயிலும் பண்டாரவளை, துஹூல்கொல்ல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட சிறுமியான மாணவியையே குறித்த நபர் இவ்வாறு கடத்திச் செல்வதற்கு முயன்றுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை (19) பாடசாலை நிறைவடைந்ததும், பஸ்ஸுக்கு செல்வதற்காக தனியாக நடந்து சென்று கொண்டிருந்த போதே, பாடசாலையில் இருந்து சுமார் 500 மீற்றர் தூரத்தில், வெள்ளை வானொன்று வீதியோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்துள்ளது.

முகத்துக்கு கறுப்புத் துணியை கண்டியிருந்த இளைஞன் ஒருவர், அந்த வானில் இருந்து இறங்கி, சிறுமியின் அருகில் வந்து, "தாய்க்கு சுகமில்லை. அவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளோம். உன்னிடம் இந்த சொக்கலேட்டை கொடுத்து, வானில் ஏற்றிக்கொண்டு வரச்சொன்னார்" என்று மாணவியிடம் அந்த நபர் தெரிவித்துள்ளார். எனினும், அம்மா, தனது தம்பி கல்வி பயிலும் பாடசாலைக்குச் செல்வதாக, வியாழக்கிழமை தெரிவித்திருந்தமை மாணவிக்கு ஞாபகத்துக்கு வந்துள்ளது.

அதனையடுத்து அருகிலிருந்த படிக்கட்டுகளின் ஊடாக ஓடிச்சென்ற அந்த மாணவி, தனக்குத் தெரிந்த தங்க ஆபரண கடைக்குள் நுழைந்து தப்பித்துக் கொண்டார்.

அதன்பின்னர், தன்னுடைய தாயுடன் வந்தே மாணவி மேற்கண்டவாறு முறைப்பாடு செய்துள்ளார்.

# நீலக்கல்லுக்கு பதிலாக கண்ணாடி கல்லை வைத்துவிட்டு மாயம்

இலங்கை கோடீஸ்வரர் போல் வேடமணிந்த நபர் ஒருவர் மேலும் இரு தரகர்களுடன் வந்து மாணிக்க கற்களை பரிசோதிக்கும் போர்வையில் போலியான கல்லை பயன்படுத்தி 80 இலட்சம் ரூபாய் பெறுமதியான உண்மையான மாணிக் கக்கல்லை திருடி அந்த இடத்தை விட்டு வெளியேறி சென்றுள்ளார்.

இந்த மோசடி நபர்கள் இதற்கு முன்னர் ஒருவரைப் பயன்படுத்தி மாணிக்கக் கல்லின் வடிவத்தைப் பார்த்து அதே வடிவில் போலி மாணிக்கக் கல்லை வெட்டியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்காணிப்பு கமெரா அமைப்புகளில் இருந்து பெறப்பட்ட சந்தேக நபர்களின் படங்களை வைத்து சந்தேக நபர்களை கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கண்டி தலைமையகத்துக்கு பொறுப்பான பிரதான பொலிஸ் பரிசோதகர் ரசிக சம்பத் தலைமையில் குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மகளை நிர்வாணமாக்கி பாலியல் தொந்தரவு

இந்த கான்ஸ்டபிளின் நோய்வாய்ப்பட்ட தாயை கவனித்துக்கொள்வதற்காக, இந்த யுவதி மற்றும் அவருடைய தாய், இரண்டு வருடங்களாக அந்த கான்ஸ்டபிளின் வீட்டில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அந்த பொலிஸ் கான்ஸ்டபிளுக்கு சொந்தமான 10 ஆயிரம் ரூபாய் பணம் காணாமல் போனமை தொடர்பில், தாயையும் மகளையும் அறையொன்றுக்குள் அழைத்துச் சென்றுள்ளார்.

அங்குவைத்து தன்னை திருமணம் செய்துகொள்ளுமாறு அந்த யுவதியிடம் பொலிஸ் கான்ஸ்டபிள் கோரிக்கையை முன்வைத்துள்ளார். அக்கோரிக்கையை அந்த யுவதி நிராகரித்துள்ளார் என யுவதியின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பின்னர், அந்த யுவதியை கடுமையாக தாக்கிய கான்ஸ்டபிள், தாயின் முன்னிலையில் யுவதியை நிர்வாணமாக்கி, வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்றுள்ளார். இதுதொடர்பில், கொஸ்கம பொலிஸ் நிலையத்தில், வெள்ளிக்கிழமை (19) முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த யுவதி முறைப்பாடு செய்வதற்கு முன்னர், கொஸ்கம பொலிஸ் நிலையத்துக்குச் சென்ற பொலிஸ் கான்ஸ்டபிள், தன்னுடைய 10 ஆயிரம் ரூபாய் காணாமல் போனது தொடர்பில் முறைப்பாடொன்றை செய்துள்ளார்.

பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் மாற்றுத்திறனாளியான 26 வயதான யுவதியை, வைத்திய பரிசோதனைக்காக அனுப்பிவை க்கப்பட்டுள்ளதாக தெரிவித்த கொஸ்கம பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

# ஜப்பான் பறக்கிறார் ஜனாதிபதி ரணில்

இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவை எளிதாக்குவதில் ஜப்பானின் முக்கிய பங்கை ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் ஒப்புக்கொள்வார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புதிய முதலீடுகள் மூலம் இலங்கையின் பொருளாதாரத்துடன் மேலும் ஈடுபடுவதற்கு ஜப்பானிய அரசாங்கத்துக்கு அழைப்பு விடுக்கும் அதேவேளை சர்ச்சைக்குரிய இலகு ரயில் திட்டம் உட்பட பல திட்டங்கள் குறித்து ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளார்.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்கும், பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்கும், நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் இந்த விஜயங்கள் வாய்ப்புகளாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டைவிட்டு திங்கட்கிழமை வெளியேறவுள்ள ஜனாதிபதி, சனிக்கிழமையன்று நாட்டை வந்தடைவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஜனாதிபதிக்கு அஸ்கிரிய பீடம் விசேட குறிப்பாணை

ஷ்யாமோபாலி மகா நிகாயாவின் அஸ்கிரிய பீட மகா நாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரதன நாயக்க தேரரால் இந்த விசேட மகஜர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கண்டி மல்வத்து அஸ்கிரிய மகாநாயக்க தேரர்களை சனிக்கிழமை (20) சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக்கொண்டார். இதன்போதே அஸ்கிரிய மஹாநாயக்க தேரர் இந்த விசேட செய்தியை கையளித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள விகாரைகள் மற்றும் நாடெங்கிலும் உள்ள தனித்துவமான வரலாற்று சிறப்புமிக்க பௌத்த விகாரைகளை புனரமைப்பதில் உள்ள தடைகள் நீக்கப்பட்டு அந்த பணிகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் மூன்று விடயங்கள் அடங்கிய குறிப்பாணையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், தற்போது தீவின் பல்வேறு பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் தொல்பொருள் இடங்கள் தொடர்பான திட்டங்கள் நாடளாவிய ரீதியில் அமல்படுத்தப்படுவதுடன், வெளி தரப்பினர் வழங்கும் உதவிகளை அதற்காகப் பயன்படுத்த வேண்டும்.

மேற்படி விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தி அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அந்த குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 1,000 பொருட்களுக்கு கட்டுப்பாடுகள் தளரும்

கணினி, திறன்பேசி, தொலைக்காட்சி, வீட்டு உபயோகப் பொருட்கள், எழுதுபொருட்கள், உணவுப் பொருட்கள், ஆடைகள், தோல் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள், உதிரிப் பாகங்கள் உள்ளிட்டவற்றின் இறக்குமதி கட்டுப்பாடுகள் தளரும் என்று அறியமுடிகிறது.

மேலும், தொழிற்சாலைகளுக்குத் தேவையான மூலப் பொருட்கள், விவசாய உபகரணங்கள், குளியலறை பொருத்துதல்கள் மற்றும் பீங்கான் ஓடுகள் ஆகியவையும் அடங்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அந்நிய செலாவணி நெருக்கடி காரணமாக 2022ஆம் ஆண்டு மார்ச் இறக்குமதி கட்டுப்பாடுகள் அமலாக்கப்பட்ட நிலையில், பின்னர் சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன.

# லண்டன் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம்

சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கும் குறித்த இழப்பீட்டுக்குள் செல்லுபடியாகும் என்றும் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது. கப்பலினால் சுற்றுச்சூழலுக்கு ஏற்பட்ட பாதிப்பிற்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வது தொடர்பில் சிலர் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று சட்டமா அதிபர் திணைக்களம் தெரிவித்துள்ளது. பாதிப்புக்கு இழப்பீடு கோரி சிங்கப்பூர் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை சர்வதேச வணிக நீதிமன்றத்துக்கு மாற்றுவது குறித்த தீர்மானம் எதிர்வரும் 1ஆம் திகதி அறிவிக்கப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்தது. வழக்கு விசாரணை மே 15 ஆம் திகதி சிங்கப்பூர் மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்றதாகவும், அடுத்த வழக்குத் தவணை ஜூன் மாதம் நடைபெறவுள்ள நிலையிலேயே சிங்கப்பூர் சர்வதேச வணிக நீதிமன்ற விதிகளின் அடிப்படையில் வணிக நீதிமன்றத்துக்கு மாற்றுவது குறித்து பரிசீலித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியே மீட்டெடுத்தார்

கேகாலை மாவட்டத்தில் அரநாயக்க, மாவனெல்ல மற்றும் ரம்புக்கன ஆகிய பிரதேசங்கள் உள்ளடங்கக்கூடிய வகையில் சுத்தமான குடிநீரை பெற்றுக்கொள்ளும் நோக்கத்துடன் நிர்மாணிக்கப்பட்ட ஹெம்மாத்தகம நீர்வழங்கல் திட்டம் அசுபினி எல்ல நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பொதுமக்கள் பாவனைக்கு சனிக்கிழமை (20) கையளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

"இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பு நல்கிய நெதர்லாந்து, துருக்கி ஆகிய நாடுகளின் அரசாங்கங்களுக்கு நன்றிகூற கடமைபட்டுள்ளோம். அதேபோல குறித்த வேலைத்திட்டத்தில் பங்கேற்ற நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் மற்றும் ஒப்பந்தக்காரர்களுக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஐக்கிய நாடுகளின் நிலைபேண்தகு அபிவிருத்தி இலக்குகளில் 6ஆம் பிரிவில், அனைவருக்கும் சுத்தமான குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்ற இலக்கை அடைவதற்கு நாம் தீவிரமாக செயற்படுவோம்.

இவ்வேலைத்திட்டத்தை முதலில் ஆரம்பித்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீம், எதிரணியில் இருந்தாலும் இந்நிகழ்வில் பங்கேற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கு மத்தியிலும் இப்படியான வேலைத் திட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கான சூழ்நிலையை எமது ஜனாதிபதியே ஏற்படுத்திக்கொடுத்துள்ளார் என்பதையும் நினைவுகூர வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து ஜனாதிபதியே மீட்டெடுத்தார். கைவிடப்பட்டிருந்த அபிவிருத்தி திட்டங்களை மீள ஆரம்பிப்பதற்கு ஏதுவான நிலைக்கு அவர் நாட்டை கொண்டு வந்துள்ளார். எமது நாட்டை அவர் சிறந்த நிலைக்கு கொண்டுவருவார் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார்.

# ஆணைக்குழுக்கள் நாட்டுக்கு எதற்கு?

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "சுயாதீன ஆணைக்குழுக்களை நிறுவி, நீதியான நிர்வாகத்தை தோற்றுவிக்க நாம் இருபத்தோராம் திருத்தத்துக்கு மீண்டும் ஆதரவு அளித்தோம். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தை பார்க்கும் போது, இந்நாட்டிற்கு ஆணைக்குழுக்கள் தேவையா என்ற கேள்வி எழுந்துள்ளது.

மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க தேர்தல் ஆணைக்குழு இருப்பதால் அதை சுயாதீனமாக இயங்கவிடாது தேர்தலை நடந்தாதிருக்க அரசாங்கம் தமது செல்வாக்கை பிரயோகிக்கிறது.

பொதுமக்களுக்காக முன்நிற்கும் இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரை பதவி நீக்கம் செய்ய தற்போதைய அரசாங்கம் பிரேரணையை பாராளுமன்றத்தில் கொண்டு வரவுள்ளது.

இந்தப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளர் எதிர்க்கட்சியினராலா நியமிக்கப்பட்டார்? இல்லை! ஆளும் தரப்பாலே நியமிக்கப்பட்டார். தற்போதைய அரசாங்கத்தில் ஆணைக்குழுக்கள் அரசுக்கு கைகோர்த்து இஷ்டத்திற்கு ஆடவில்லை என்றால் பதவி நீக்க முற்படுகின்றனர்.

மின்கட்டண உயர்வுக்கு எதிராக பொதுமக்களுக்காக முன்நின்று நீதிமன்றம் சென்றார். பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரின் செயற்பாடுகள் தொடர்பில் கருத்துவேறுபாடுகள், விடயங்கள் இருந்தாலும் அவர் பொதுமக்களுக்காகவே முன் நின்றார். மின் கட்டணத்தை 200 % ஆல் அதிகரிக்கும்போது அரசாங்கம் விரும்பியவாறு ஆடாமல் அவர் மக்களுக்காக நடவடிக்கை எடுத்தார்.

அவ்வாறு மக்களுக்காக செயற்படாவிட்டால் அது சுயாதீன ஆணைக்குழுவாகாது. பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தவிசாளரை பதவி நீக்கம் செய்வதற்கான பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட வாக்கெடுப்பில் நாங்கள் எதிராக வாக்களிப்போம் என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இவ்வாறு பயப்படாதீர்கள், அரசாங்கத்தின் தாளத்திற்கு ஆடாதீர்கள், ஒரு தலைவர் நீக்கப்படுவதனால் அனைத்து தலைவர்களையும் நீக்க முடியாது என்று மறுபுறம் சுயாதீன ஆணைக்குழுக்களில் உள்ள அங்கதவர்களுக்கு நாம் கூற விரும்புகின்றோம்.

எனவே இந்த ஆணைக்குழுக்கள் சுதந்திரமாக செயற்படுவதற்கான நியாயமான சுதந்திரமான சூழலை உருவாக்க வேண்டும் என்றார்.

# ஆளுநர்களாக மூவரை முன்மொழிந்தது மொட்டு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்மொழிந்த பெயர்களில் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவும் ஒருவர் என்றும் வடமேல் மாகாண ஆளுநராக அண்மையில் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

ஆளுநர்களை மாற்ற வேண்டாம் என்று ஜனாதிபதியிடம் விடுத்த கோரிக்கைக்கு ஜனாதிபதி சாதகமாக பதிலளித்துள்ளதாகவும் அறியமுடிகிறது.

வட மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், வட மேல் மாகாண ஆளுநர் அட்மிரல் ஒப் த ப்ளீட் வசந்த கரன்னாகொட ஆகியோர் திங்கட்கிழமை (15) பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

அந்த வெற்றிடங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநராக திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், கிழக்கு மாகாண ஆளுநராக செந்தில் தொண்டமான், வடமேல் மாகாண ஆளுநராக லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன ஆகியோர் கடந்த 17ஆம் திகதி பதவிப்பிரமாணம் செய்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதியொருவர் பதவி விலகிய பின்னர் ஆளுநர்கள் பதவி விலகுவது சம்பிரதாயபூர்வமானது என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்ததுடன், சில ஆளுநர்களை பதவியிலிருந்து நீக்குமாறு சம்பந்தப்பட்ட மாகாணங்களின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ச்சியாக கோரிக்கை விடுத்து வந்துள்ள நிலையிலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

# மோட்டார் சைக்கிள் மதகுடன் மோதி விபத்து

■ எஸ். தில்லைநாதன்

வடமராட்சி கிழக்கு, அம்பன் பகுதியில் வெள்ளிக்கிழமை (19) இரவு 10 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்தார்.

குறித்த நபர், தனது தோட்டத்துக்கு காவலுக்குச் செல்வதாகக் கூறிவிட்டு, வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் வெளியேறிய நிலையில், அம்பன் சமுர்த்தி வங்கிக்கு முன்பாக மதகுடன் மோதி, பாலம் ஒன்றுக்குள் வீசப்பட்டுள்ளார்.இரவு வேளை என்பதால், யாராலும் கவனிக்கப்படாமல் நீண்ட நேரம் விபத்துக்குள்ளான நிலையிலேயே காணப்பட்டுள்ளார்.

அவ்வேளை, தற்செயலாக வீதியில் பயணித்த இளைஞர் 1990 அம்பியுலன்ஸ்க்கு அறிவித்து, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். பின்னர், மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

# சிறுவன் கடத்தல்: இருவரை பணயக் கைதியாக்கி தாக்குதல்

தவணைக் கட்டணத்தை செலுத்தாத மோட்டார் சைக்கிளை கைப்பற்றுவதற்காக, அந்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றுக்கொண்டிருந்த 15 வயதான சிறுவனுடன், மோட்டார் சைக்கிளை இருவர் கடத்திச் சென்றுள்ளனர்.

இவர்களில் ஒருவர் பல மணிநேரத்துக்குப் பின்னர், அச்சிறுவனை அழைத்துவந்து விட்டவேளையில், அவ்விருவரையும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் கடுமையாக தாக்கி பணயக் கைதிகளாக வைத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் இருவரும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அதில் பலத்த காயங்களுக்கு உள்ளான ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.

மீரிகம, முதுகுருகம்பல பிரதேசத்தைச் சேர்ந்த 15 வயதான பாடசாலை மாணவன், தன்னுடைய தந்தையின் மோட்டார் சைக்கிளில் ஏதோவொரு தேவைக்காக, கடைக்குச் சென்றுள்ளார்.

அப்போது ஓட்டோவில் இருவர் வந்திறங்கியுள்ளனர். அவர்களில் ஒருவர், அச்சிறுவனை ஓட்டோவில் ஏற்றிக்கொண்டு, மற்றையவர் மோட்டார் சைக்கிளை செலுத்தியவாறு நிட்டம்புவையை நோக்கிச் சென்றுள்ளனர்.

இதற்கிடையில் தங்களுடைய பிள்ளையை காணவில்லையென, பொலிஸில் பெற்றோர் முறைப்பாடு செய்ய, அக்கிராமத்தைச் சேர்ந்தவர்கள் இணைந்து சிறுவனை தேடத்தொடங்கியுள்ளனர்.

பல மணிநேரத்துக்குப் பின்னர், ஓட்டோவில் அச்சிறுவனை ஏற்றிவந்த இருவரும், சிறுவனை இறக்கிவிட்டு செல்வதற்கு முயன்றுள்ளனர். அப்போது அவ்விருவரையும் சுற்றிவளைத்த கிராமவாசிகள், அவ்விருவர் மீதும் கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர். இதனால் அவ்விருவரும் கடும் காயங்களுக்கு உள்ளாகினர். ஓட்டோவையும் அடித்து நொறுக்கியுள்ளனர்.

சம்பவத்தை கேள்வியுற்று ஸ்தலத்துக்கு விரைந்த மீரிகம பொலிஸ் அதிகாரிகள், கிராமவாசிகளால் பணய கைதிகளாக பிடித்துவைக்கப்பட்டிருந்த இவ்விருவரையும் மீட்டு, கைது செய்தனர். அதிலொருவரை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நபரே அந்த சிறுவனை, மீளவும் ஒப்படைப்பதற்கு சென்றிருந்தார். அவர், வாடகைக்கு அமர்த்தியிருந்த ஓட்டோவிலேயே சிறுவனை ஏற்றிச்சென்றிருக்கின்றார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் கறுவா பயிற்சி பட்டறை

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாணம், சங்கரத்தை பங்குரு சனசமூக நிலையத்தில் கறுவா உற்பத்தி தொடர்பான பயிற்சி பட்டறை சனிக்கிழமை (20) நடைபெற்றது.

பங்குரு சனசமூக நிலையத்தின் தலைவர் சு. புகனகுமார் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இலங்கை கறுவா ஆராய்ச்சி நிலைய பணிப்பாளர் கலாநிதி ஜீ.ஜீ ஜயசிங்க பிரதம அதிதியாக கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில், வடக்கு மாகாண விவசாய திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி அஞ்சனாதேவி, பங்குரு சனசமூக நிலையத்தினர், பொதுமக்கள், பயிற்சியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சாராயத்தின் விலை எவ்வளவு தெரியுமா?

திறந்த சந்தைகளில் விற்பனை செய்யப்படும் அதிவிசேட சாராயத்தின் விலை (கல் அரக்கு) 2,940 ரூபாயாகும். எனினும், அந்தச் சாராய போத்தலின் உண்மையான விலை 294 ரூபாயாகும் என்பது உங்களில் பலருக்கும் தெரியாது.

அந்த 294 ரூபாயையும் கழித்தால், 2,646 ரூபாய் மீதப்படும். அந்தத் தொகையானது அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருக்கும் வரிகள் மற்றும் வர்த்தகர்களின் இலாபம் ஆகியவற்றுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன என கலால் திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மதுபானங்களில் இருந்து அறவிப்படும் வரிகளில், கலால் வரி, வற்வரி, ஈட்டும்போது அறவிடப்படும் வரி ஆகிய வரிகள் மிக முக்கியமான வரிகளாகும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

# 200 வருடகால மயானத்தை மாற்ற முயற்சி; மக்கள் எதிர்ப்பு

■ செ.தி.பெருமாள்

நோட்டன் பொலிஸ் பிரிவில் உள்ள திபட்டன், லக்ஷபான தோட்டத்தில் சுமார் 200 ஆண்டு காலமாக பாட்டன், பாட்டி, தாத்தா, அம்மாய், தந்தை, தாய் பிள்ளைகள் என நான்கு தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வருகின்றனர்.

கடந்த 198 வருடமாக அங்கு பணிபுரியும் ஊழியர்கள் மரணம் அடைந்தால், அவர்களுக்கான இறுதி கிரியைகள் நடத்த இலகுவான இடம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் அந்தத் தோட்டத்தை பொறுப்பேற்றவர்கள் கூட, அதே இடத்தில் இறுதி கிரியைகள் நடத்த எவ்விதமான எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை.

தற்போதைய நிர்வாகம், அந்த இடத்தில் இறுதிக் கிரியைகளை நடத்த கூடாது எனக் கூறியது. கடந்த வருடம் பெண் தொழிலாளி ஒருவர் மரணித்த போது, காலம் காலமாக இறுதி கிரியை செய்த இடத்தில் செய்ய வேண்டாமெனக் கூறியது. எனினும், நோட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் பணிப்புரையின் பேரில், உரிய இடத்தில் அப்பெண்ணுக்கான இறுதிக் கிரியைகள் நடந்தன

இந்நிலையில், அத்தோட்டத்தைச் சேர்ந்த பெண் தொழிலாளி ஒருவர் சனிக்கிழமை (20) மரணித்தார். அவரது குடும்பத்தினர் இறுதிக்கிரியை செய்ய குறித்த இடத்தை தோட்ட நிர்வாகத்திடம் கேட்ட போது, அவ்விடத்தை வழங்க மறுப்பு தெரிவித்து, வேறோர் இடத்தில் இறுதிக் கிரியைகளை நடத்தக் கூறினர்.

அவ்வாறு வழங்கப்பட்ட இடம் வெகு தூரத்தில் உள்ளதால், தோட்டத் தொழிலாளர்கள் தங்கள் சார்ந்த தொழில் சங்கத் தலைவர் செல்லையா சிவசுந்தரத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

முன்னாள் அம்பகமுவ பிரதேச சபை உறுப்பினர் மற்றும் செங்கொடி சங்கத்தின் தலைவர் செல்லையா சிவசுந்தரம் இது தொடர்பாக தோட்ட முகாமையாளர், அம்பகமுவ பிரதேச செயலாளர் மற்றும் நோட்டன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, வலய பொலிஸ் அதிகாரி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு சென்றார்.

நீண்ட தூரம் உள்ள ஓர் இடத்தில் புதைக்குழி தோண்டி, இறுதிக் கிரியைகள் செய்ய வேண்டுமென தோட்ட நிர்வாகம் பணித்து உள்ளதாக அத்தோட்ட தொழிலாளர்கள் குற்றஞ்சாட்டினர்.

இதனால், சடலத்தை குறித்த நேரத்தில் அடக்கம் செய்ய செய்ய முடியாத நிலை, உறவினர்களுக்கு ஏற்பட்டது. எனினும், பொலிஸாரின் பணிப்புரையின் பிரகாரம், புதிய இடத்தில் இறுதிக்கிரியைகளை நடத்த வேண்டிய சூழ்நிலைக்கு அக்குடும்பத்தினர் தள்ளப்பட்டனர்.

200 வருட காலமாக ஒரே தோட்டத்தை பரம்பரை பரம்பரையாக கொண்ட தொழிலாளர்களுக்கே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என அங்குள்ள மக்கள் அங்கலாய்க்கின்றனர். அந்தத் தோட்டத்தில் தற்போது 150 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் வசிக்கின்றனர்.

# மணல் கடத்தல் முறியடிப்பு: இருவர் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்



அனுமதிப்பத்திர விதிமுறைகளை மீறி சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிவந்த இருவரைக் கைது செய்துள்ளதுடன் இரண்டு உழவு இயந்திரங்களையும் மணலையும் கைப்பற்றியுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய போதைவஸ்து ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி எச்.எம். சியாம் தெரிவித்தார்.

காத்தான்குடி பிரதான வீதியில் பொலிஸார் ஞாயிற்றுக்கிழமை (21) மேற்கொண்ட திடீர் சோதனையின்போது இச்சட்டவிரோத மணல் கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறியின் வழிகாட்டலில் போதை வஸ்து ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சியாம் தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த சட்டவிரோத நடவடிக்கையை முறியடித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த உள்ளதாக தெரிவித்த பொலிஸார், வாகனங்களை பாரப்படுத்த உள்ளதாகவும் தெரிவித்தனர்.

அத்துடன் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகவும் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

முத்தையன் கட்டில் சூனியம் கலைப்பதாக

# பெண்களுடன் சில்மிசம்

## திருகோணமலையை சேர்ந்த சாமியார் கைது

■ செ. கீதாஞ்சன்

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் பிரிவுக்கு உட்பட்ட முத்தையன் கட்டு, ஜீவநகர் பகுதியில் சூனியம் நீக்குவதாக தெரிவித்து, பெண்களுடன் சில்மிசம் வைத்த சாமியார் பொலிஸாரிடம் மாட்டிக்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது: திருகோணமலையைச் சேர்ந்த பூசாரி, முத்தையன்கட்டு, ஜீவநகர் பகுதிக்கு அடிக்கடி வந்து பில்லி சூனியம் நீக்கிட்டு செல்வார்.

இந்த நிலையில், வியாழக்கிழமை (18) யாழ்ப்பாணத்தில் இருந்தும் வவுனியாவில் இருந்தும் வந்த இரண்டு யுவதிகளுக்கு சூனியம் நீக்குவதாகக் கூறி, வீட்டுக்குள் அழைத்து சென்று சூனியம் நீக்கியுள்ளார். இதில் வவுனியாவைச் சேர்ந்த யுவதி வீடு சென்றுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த யுவதி, தனக்கு நடந்தவற்றை தாய், உறவினர்களுக்கு தெரியப்படுத்தியுள்ளார்.

இதன்போது, யுவதி மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தெரியவந்ததை அடுத்து, பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. யுவதி, முல்லைத்தீவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பூசாரியை ஒட்டுசுட்டான் பொலிஸார் கைதுசெய்துள்ளார்கள்.

பாதிக்கப்பட்ட 20 அகவையுடைய யுவதியிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட பரிசோதனையின் போது, யுவதிக்கு மது அருந்தக் கொடுத்துள்ளமையும் தெரியவந்துள்ளது. பூசைக்காக சாராயம் கொடுக்கப்பட்டமையும் இவ்வாறு பல சம்பவங்கள் பதிவாகி உள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.


# கல்முனையில் என்பியல் சத்திர சிகிச்சை கூடம் திறந்து வைப்பு

■ வி.ரி சகாதேவராஜா

கல்முனை ஆதார வைத்தியசாலையில் நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம், என்பியல் விடுதி, என்பியல் சத்திர சிகிச்சை கூடம் என்பன புதிதாக திறக்கப்பட்டு, பொது மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

வைத்தியசாலை பணிப்பாளர் டொக்டர் இரா முரளீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், சுகாதார அமைச்சின் செயலாளர் எஸ். ஸ்ரீ சந்திர குப்தா பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார்.

திறந்து வைக்கப்பட்ட 'நோயாளர் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவல் மையம்' இலங்கையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள






ஒரு பிரிவு ஆகும். இப்பிரிவானது, வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் இரா முரளீஸ்வரனின் ஆலோசனைப்படி, பிரதி பணிப்பாளர் டொக்டர் ஜெ. மதனின் வழிகாட்டலில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.


# சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலய வைகாசிப் பொங்கல்

■ அ. அச்சுதன்

கிழக்கில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சேனையூர் ஸ்ரீ நாகம்மாள் ஆலயத்தின் வருடாந்த வைகாசிப் பொங்கல் பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (04) காலை எட்டு மணி சுபவேளையில், சேனையூர் ஸ்ரீ வருணகுல விநாயகர் ஆலயத்திலிருந்து பாரம்பரிய முறைப்படி மடைப்பெட்டி ஊர்வலம், நாகம்மாள் ஆலயத்தைச் சென்றடைந்து, மடைப்பெட்டி வளர்ந்து ஆலயத்தின் பிரதம குரு சிவஸ்ரீ அ. அரசரெத்தினத்தால் கையேற்கப்பட்டு பொங்கல் பெருவிழா ஆரம்பமாகும்.

வேளை நூல் கட்டுதல், பொங்கல் சாடி வைத்தல், பால்பழப்பூசை, சிவலிங்க நாகதம்பிரானுக்கு புனித மஞ்சள் நீர்வார்க்கும் நிகழ்வும் நடைபெறும்.

நிறைவாக, ஸ்ரீமகாவிஷ்ணு ஆறுமுகவேல் சகிதம் அம்பாள்



திருஉலாவந்து அடியார்களுக்கு அருள் பாலிப்பாள்.

மூதூரில் இருந்து நாகம்மாள் ஆலயம் வரை, பஸ் வசதி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதுடன் ஆலயத்தில் இவ்வருடமும் அன்னதானம் வழங்கப்படும் என ஆலய பரிபாலான சபை அறிவித்துள்ளது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள்

# பதில் பணிப்பாளராக டொக்டர் சத்தியமூர்த்தி நியமனம்

■ மு. தமிழ்ச்செல்வன்

வடக்கு மாகாணத்தின் வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராக டொக்டர் சத்தியமூர்த்தி வெள்ளிக்கிழமை (19) நண்பகல் பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார்.

வடமகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரை, டொக்டர் சத்தியமூர்த்தி, யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் பதவிக்கு மேலதிகமாக, இக்கடமையை ஆற்றுவார் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



# அறிமுகம் இல்லாதவர்களிடம் அவதானமாக நடப்பதே நன்று!

சிறுவர், சிறுமியர் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை அவதானிக்குமிடத்து, ஓரிரு சம்பவங்களைத் தவிர, பெரும்பாலானவை அவர்களுக்கு நன்கு தெரிந்தவர்கள், உற்றார் உறவினர்களால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இவ்வாறான குற்றச்செயல்களில் ஈடுபடுவோர், 'பச்சோந்தி' போல தங்களுடைய திட்டங்களை மாற்றிக்கொண்டே இருப்பார்கள். கடத்தும்போது முரண்டுபிடித்தால் படுகொலை செய்துவிட்டு தப்பியோடிவிடுவர். இன்னும் சிலர், துஷ்பிரயோகம் செய்து கொன்றுவிடுவர்.

நாட்டில் மிக அண்மைய காலங்களில் நடந்த சம்பவங்களை பார்க்குமிடத்து, ஒவ்வொரு சம்பவமும் அவர்களுக்கு தெரிந்தவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளமை ஆரம்பக்கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. ஆகையால்தான், தங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்களிடம் அவதானமாகவும், அறிமுகமானவர்களிடம் மிகமிக அவதானமாகவும் இருக்குமாறு பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

களுத்துறையில் மூன்றாம் மாடியிலிருந்து விழுந்த அந்த மாணவியை, சக நண்பி அழைத்துச் சென்றுள்ளார். மன்னாரில் காணாமல்போய் மீட்கப்பட்ட மற்றுமொரு மாணவி, முன்னாள் காதலனால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார். தான் வசிக்கும் பிரதேசத்தை சேர்ந்த ஒருவரால், கம்பளை யுவதி படுகொலை செய்யப்பட்டுள்ளார். தன்னுடைய முறையற்ற காதலன் என்று அறியப்பட்ட பௌத்த பிக்கு, அப்பெண்ணின் 13 வயதான மகளை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

இந்நிலையில், பல கடத்தல் சம்பவங்கள் முறியடிக்கப்பட்டுள்ளன. வெள்ளை வானைக் கண்டாலே, தங்களுடைய பிள்ளைகளை கடத்துவதற்காகவே வந்துள்ளன என யூகித்துக்கொண்டு, அந்த வாகனங்களின் மீதும் அதில் இருந்தவர்கள் மீதும் தாக்குதல் நடத்திய சம்பவங்களும் பதிவாகியுள்ளன.

யுத்த காலப்பகுதியிலும் அதற்குப் பின்னரும் மனிதர்களை கடத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட வெள்ளைவான் கலாசாரத்தை எழுதில் மறக்கமுடியாது. இதில், ஓரிரு குழுவினர் புகுந்து விளையாடி இருக்கக்கூடும். தங்களுக்கு எதிரானவர்களை கடத்தி, நாடகத்தையும் அரங்கேற்றி இருக்கலாம். எனினும், வெள்ளைவான் அச்சம், தமிழர்களுக்கு புதிதானது அல்ல.

அதேபோன்றதொரு நிலைமையே தற்போதும் அரகேற்றப்படுகின்றது. வெள்ளைவான் அச்சுறுத்தல் முற்றாக ஒழிக்கப்படவில்லை. அதைப் பயன்படுத்தி சிலர் புகுந்து விளையாடிகொண்டுள்ளனர். அவ்வாறானதொரு சம்பவம்தான் மீரிகமவில் இடம்பெற்றுள்ளது.

தவணைக்கட்டணம் செலுத்தாமையால், தனது தந்தையின் மோட்டார் சைக்கிளை செலுத்திய 15 வயதான சிறுவனை மோட்டார் சைக்கிளுடன், கடத்திச்சென்ற இருவர், கிராமவாசிகளின் தாக்குதல்களுக்கு உள்ளான சம்பவம் மீரிகமவில் இடம்பெற்றுள்ளது. சட்டத்தின் பிரகாரம் சென்றிருந்தால், பணயக் கைதிகளாகி இருக்கவேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

இந்நிலையில், பாடசாலை முடித்து வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த 10 வயதான மாணவியை, சொக்கலேட் கொடுத்து, வானில் ஏற்ற முயன்ற சம்பவம் பண்டாரவளையில் இடம்பெற்றுள்ளது. எனினும், தன்னுடைய தாய், முதல்நாள் கூறியிருந்தமை ஞாபகத்துக்கு வந்தமையால் அந்த சிறுமி தப்பித்துள்ளாள்.

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளுக்கு பின்னாலே சென்று கொடிருக்க முடியாது. ஆகையால், தங்களுக்கு தெரிந்தவர்களாக இருந்தாலும், தெரியாதவர்களாக இருந்தாலும் சரி விழிப்பாக இருக்கவேண்டும். தனியாகச் செல்லும் போது, வாகனங்களுக்கு ஓரமாக செல்வதை தவிர்ப்பது சிறந்தது.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

மரணம் வாழ்வின் முடிவு அல்ல; ஒருவர் இறந்துபோனால், அவர் தொலைந்து போவதில்லை. நல்லோர் மறைந்தால் புகழப்படுகின்றார்கள்; தீயவர்களை மக்கள் திட்டுகின்றார்கள்.

மொத்தத்தில், இறந்த பின்னரும் ஆராயப்படும் நபர்களாகின்றனர். இதுதான் உண்மைநிலை. வாழ்க்கையை வெறுத்து தங்கள் இன்னுயிரைத் துறந்தால், அது வாழ்வின் முடிவு என்கின்றோம். அப்படி இறப்பவர்கள் துரதிர்ஷ்டசாலிகள்.

வாழ்க்கையை முடித்தால், அதனால் அவர் செய்த சாதனைகள் என்ன என, எத்தனை பேர் கவலைப்படுகின்றார்கள்? ஒருவரின் இழப்பு, அவர் சார்ந்தவர்களுக்கு வரும் பாதிப்பு கொஞ்சநஞ்சம் அல்ல! துன்பத்தை வழங்குபவர் மனச்சாட்சி அற்றவர்.

நீண்ட வாழ்வை கத்தரிக்கலாகாது. இறப்பால் பிரச்சினைகள் தீர்வதும் இல்லை; வளரும்.

நிரந்தர வாழ்வு வாழ முடியும். உண்மைகயாக வாழ்பவன் உலகையே உயிர்ப்பிப்பான்.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# ஜனாதிபதி தேர்தலும் அவசரப்பட்ட சஜித்தும்



என்.கே அஷோக்பரன்

கடந்த மே மாதம் 15ஆம் திகதி, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ ஊடகங்களுக்கு கருத்துரைக்கும் போது, "ஜனாதிபதி தேர்தலை திட்டமிட்ட காலத்துக்கு முன்னதாக நடத்துவதற்கான அரசாங்கத்தின் பிரேரணைக்கு, ஐக்கிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும்" என அறிவித்தார்.

அதேநேரத்தில், அரசாங்கம் தனது வசதிக்காக, தேர்தல் நடைமுறைகளை கையாளும் முயற்சியை விமர்சித்த அவர், இது ஜனநாயகத்தை மீறுவதாகும் என்றும் கூறினார்.

ஜனாதிபதியின் அல்லது அவரது ஆதரவாளர்களின் பணிப்புரையின் பேரில் மாத்திரம், ஜனாதிபதி தேர்தலை திட்டமிடுவது அடிப்படையில் பிழையானது எனவும் வலியுறுத்தினார். விரைவானதும் ஜனநாயகத் தேர்தலை உறுதி செய்வதற்காக நியாயமானதும் வெளிப்படையான ஒழுங்குமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும் அவர் குறிப்பிட்டார்.

2019 நவம்பரில் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில், கோட்டாபய ராஜபக்ஷ வெற்றி பெற்று ஜனாதிபதியானார். அவரது பதவிக்காலம் 2024 வரை உள்ளது. கோட்டா, பதவி விலகியதன் பின்னர், கோட்டாவின் எஞ்சிய பதவிக் காலத்துக்கு, அரசியலமைப்பின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

இந்தநிலையில், மேற்சொன்ன கருத்தை சஜித் பிரேமதாஸ கூறிய மறுநாளே, அதாவது மே மாதம் 16ஆம் திகதி, இன்னொரு செய்தி ஊடகத்தில், '16ஆம் திகதி நடந்த ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டத்தில், அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக, சஜித் பிரேமதாஸ முன்னிறுத்தப்படுவார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது' என்று, செய்தி பிரசுரமாகி இருந்தது.

இது தொடர்பில், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும், சஜித்தின் நம்பிக்கைக்கு உரியவருமான ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரான சுஜீவ சேனசிங்க ஆகியோர் சமர்ப்பித்த மேற்சொன்ன யோசனைக்கு, செயற்குழு கூட்டத்தில் ஏகமனதாக அங்கிகாரம் வழங்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. குறித்த கூட்டம், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்றது.

இவ்வளவு அவசர அவசரமாக, பிரதான எதிர்க்கட்சி தன்னுடைய ஜனாதிபதி தேர்தல் வேட்பாளரை அறிவிக்க வேண்டிய தேவை என்ன? பொதுவாக, ஜனாதிபதி தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்போ, அல்லது தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரோ ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை உத்தியோகபூர்வமாகக் கட்சிகள் அறிவிக்கும்.

ஆனால், ஜனாதிபதி தேர்தலுக்கு ஒன்றேகால் வருடத்துக்கும் அதிகமான காலம் இருக்கத்தக்கதாக, ஜனாதிபதி வேட்பாளர் இன்னார் தான் என்று, பிரதான எதிர்க்கட்சி தீர்மானிக்க வேண்டிய காரணம் என்ன என்பது சுவாரஷ்யமான கேள்வி.

'ஐக்கிய மக்கள் சக்தி' என்பது ஒரு பெருங்கூட்டணியாகத்தான் தொடங்கியது. சஜித் பிரேமதாஸ, சரத் பொன்சேகா, சம்பிக்க ரணவக்க, குமார வெல்கம, ரவூப் ஹக்கீம், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், மனோ கணேசன், ரிஷாட் பதியுதீன் என பல்வேறு தரப்பினர் கைகோர்த்த பெரும் கூட்டணியாக அது தொடங்கியது.

ஆனால், காலவோட்டத்தில் ஒவ்வொருவராக விடுபட்டு தனிவழி போகத் தொடங்கினார்கள். சரத் பொன்சேகா, ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஓரங்கட்டப்பட்டார். சம்பிக்க ரணவக்கவுக்கு ஐக்கிய மக்கள் சக்திக்குள் எந்தப் பதவியும் வழங்கப்படவில்லை. அவர், '43 படையணி' என்ற ஒன்றைத் தொடங்கினார். தற்போது 'ஐக்கிய குடியரசு முன்னணி' என்ற புதிய கட்சியை ஸ்தாபித்திருக்கிறார்.

குமார வெல்கம, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்கவின் ஆதரவுடன் 'புதிய லங்கா சுதந்திரக் கட்சி' என்ற தனிக்கட்சியைத் தோற்றுவித்துவிட்டார். மறுபுறத்தில், ரவூப் ஹக்கீம், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், மனோ கணேசன், ரிஷாட் பதியுதீன் ஆகியோர் தத்தமது கட்சியின் பெயர்களில் இயங்குகிறார்களேயன்றி, ஐக்கிய மக்கள் சக்தியாக அடையாளப்படுத்துவதை தவிர்த்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது. ஆகவே, ஐக்கிய மக்கள் சக்தி என்பது அது ஆரம்பித்தபோதிருந்த பெருங்கூட்டணியாக தற்போது இல்லை.

மாறாக, பெருளவுக்கு முன்னாள் ஐக்கிய தேசிய கட்சியினரைக் கொண்ட கட்சியாகச் சுருங்கிவிட்டது. அதிலும், சஜித் ஆதரவாளர்கள் முன்னிறுத்தப்பட்டு, கட்சியின் முக்கியஸ்தர்களாக நியமிக்கப்படுவதால், கிட்டத்தட்ட சஜித் பிரேமதாஸவின் கட்சியாகவே மாறிவிட்டது.

இதெல்லாம் சரி! சஜித் பிரேமதாஸவின் கட்சியாக மாறிவிட்ட ஐக்கிய மக்கள் சக்தி, அவசர அவசரமாகத் தனது அடுத்த ஜனாதிபதி தேர்தல் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவை அறிவிக்க என்ன காரணம்?

கடைசி நிமிடத்தில், தான் ஓரங்கட்டப்பட்டு, 'எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளார்' என்ற பெயரில் வேறெவரும் ஜனாதிபதி வேட்பாளராக நியமிக்கப்பட்டு விடுவாரோ என்ற அச்சம் சஜித் பிரேமதாஸவுக்கு எழுந்திருக்கலாம்.

ஏற்கெனவே, ரணில் எதிர்ப்பாளர்களையும், சஜித் ஆதரவாளர்களையும் தவிர்த்து, ஏனைய ஐக்கிய மக்கள் சக்தியினர் சஜித்தோடு இருப்பதா, ரணில் பக்கம் மீண்டும் தாவுவதா என்று மதில்மேல் பூனைகளாக இருக்கிறார்கள்.

இந்த நிலையில், ஐக்கிய மக்கள் சக்தியின் உபதலைவராக இருந்த பி.ஹரிசன், தனது ஆதரவை ரணிலுக்கு வழங்குவதாக அறிவித்துள்ளதுடன், 20றகு மேற்பட்ட சிரேஷ்ட ஐக்கிய மக்கள் சக்தியினர் விரைவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பார்கள் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே, தனது கட்சியினர் கட்சி தாவப் போகிறார்கள் என்ற அச்சம், சஜித் பிரேமதாஸவை ஒருபுறம் வாட்டிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் மேற்குல இராஜதந்திரிகள், அரசு சாரா அமைப்புகள் மற்றும் அழுத்தக் குழுக்கள் என்பன, அடுத்த ஜனாதிபதி தேர்தல் பற்றி என்ன திட்டமிடுகின்றனவோ என்ற அச்சமும் சஜித்துக்கு கடுமையாக எழுந்திருக்கக்கூடும்.

குறிப்பாக 2010, 2015ஐப் போல, எதிர்க்கட்சிகளின் பொது வேட்பாளர் என புதிய எவரையாவது முன்னிறுத்த அனைத்து எதிர்க்கட்சிகளும், மேற்குலக இராஜதந்திரிகளும், அரசு சாரா அமைப்புகளும் அழுத்தக் குழுக்களும் ஆதரவளித்தால், தனக்கான வாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ என்று சஜித்தும், அவரது ஆதரவாளர்களும் அஞ்சியிருக்கக்கூடும். ஆகவே, அவர்கள் முந்துவதற்கு முன்னர், தாம் முந்திக்கொள்வது என்ற இந்த முடிவை அவர்கள் எடுத்திருக்கக்கூடும்.

இது அவர்களுக்கு நம்பத்தகுந்த சாக்கு ஒன்றை வழங்கும். அதாவது, நாளை மேற்குலகமோ, அரசு சாரா அமைப்புகள் மற்றும் அழுத்தக் குழுக்களோ எதிர்க்கட்சியின் பொது வேட்பாளர் பற்றிய பேச்சை எடுத்தால், "இல்லை! நாம் ஏற்கெனவே பிரதான எதிர்க்கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸதான் என்பதை அறிவித்துவிட்டோம்; இனி மாற்றுவது பொருத்தமல்ல" என நம்பத்தகுந்த சாக்கைச் சொல்ல முடியும்.

மேலும், இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் உள்ளவர்கள் கட்சி தாவுவது பற்றி ஒரு முறைக்கு இரு முறை, அவர்களை இது சிந்திக்கவும் வைக்கலாம் என்பதுகூட அவர்களது கணக்காக இருக்கலாம். அதாவது, அடுத்த ஜனாதிபதி தேர்தல் ரணில் எதிர் சஜித் ஆக அமையப் போகிறது. இதில் மாற்றமில்லை; இதை நாம் தற்போதே அறிவித்துவிட்டோம். பொது வேட்பாளர், புதிய வேட்பாளர் என்று எவரும் வரப்போவதில்லை. வெற்றி பெறப் போவது யாரென்று நீங்களே முடிவெடுத்து அவரோடு நில்லுங்கள். ஒருவேளை நீங்கள் விட்டு விட்டு போய்விட்டால், நாளை சஜித் ஜனாதிபதியானால், உங்களுக்கு எந்தவொரு வாய்ப்புமில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தியினருக்கு சொல்லாமல் சொல்கிறார்கள் சஜித்தும், அவரது ஆதரவாளர்களும். அதேவேளை, தம்முடைய கூட்டுக் கட்சியினராக இருந்தவர்களுக்கும் இதே செய்தியை அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

சஜித் பிரேமதாஸவுக்கான முக்கியத்துவம், அவரது தலைமைத்துவத்தையும், நலன்களையும் பாதுகாத்தல் என்பதைத் தாண்டி, இந்த முடிவுக்கு வேறு முக்கியத்துவமில்லை. இது மக்களை மையப்படுத்திய, மக்கள் நலனை முன்னிறுத்திய முடிவு அல்ல. ரணில் விக்கிரமசிங்கவைத் தோற்கடிக்க வேண்டும்; அதையும் சஜித்தே செய்ய வேண்டுமென்ற தனிநபர் வழிபாட்டு அரசியலைத்தான் இலங்கையின் பிரதான எதிர்க்கட்சி தனது அரசியலாக முன்வைத்துள்ளது. இந்த அரசியல் ராஜபக்ஷர்களின் அரசியலிலிருந்து பெரிதும் வேறுபட்ட ஒன்றல்ல.

## கடிதங்கள்

### சுண்டிக்குளம் பறவைகள்

## சரணாலயத்தில் மணல் அகழ்வு

### கடல்நீர் உட்புகும் அச்சம்



கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சுண்டிக்குளம் கல்லாற்றுப் பகுதியில், பல ஏக்கர் வனப்பகுதி சட்டவிரோத மணல் அகழ்வு காரணமாக அழிக்கப்பட்டுள்ளதுடன் பறவைகள் சரணாலயமும் (தேசிய பூங்கா) அழிந்துவரும் நிலையில் காணப்படுகின்றது.

கடலின் நீர்மட்டத்தை விடவும் அதிக ஆழத்தில் குழிகள் தோண்டப்பட்டு வருவதன் காரணமாக, சுண்டிக்குளம் கடல் நீர், குடியிருப்பு பகுதிக்குள் வரும் அபாய நிலை ஏற்பட்டுள்ளதாகவும், தற்பொழுது மணல் அகழ்வு, இரவு - பகல் பாராமல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாகவும், இதன் காரணமாக கல்லாற்று பகுதியில் இருந்து சுண்டிகுளம் வரை செல்லும் பாதை, பொதுமக்களால் பயணிக்க முடியாத வகையில் குன்றும் குழியுமாக காணப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

அத்துடன், வீதி சேதமடைந்துள்ள நிலையில், இப்பகுதிக்கு அம்பியுலன்ஸ் கூடச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறித்த பகுதி மக்கள தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக கனியவளப் பிரிவினரோ, பொலிஸாரோ அல்லது ஏனைய அரச அதிகாரிகளோ அரசியல்வாதிகளோ எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, கனிய வளம், வனவளம், பறவைகள் சரணாலயம், பாதுகாப்பு போன்ற துறைகளில் பொறுப்பு வாய்ந்த பதவியில் இருக்கும் அதிகாரிகள், உரிய நடவடிக்கைகளை எடுத்து, மண் அகழ்வைக் கட்டுப்படுத்துமாறு கேட்டுகொள்ளப்படுகிறார்கள்.

யது பாஸ்கரன்

eChannelling இன் புத்தாக்கமான

# டிஜிட்டல் வாழ்க்கைமுறை செயற்பாடுகள்


SLT குழும தவிசாளர் – ரொஹான் பெர்னான்டோ

வைத்திய முன்பதிவு மற்றும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகள் வழங்குநரான eChannelling PLC, 2022 நிதியாண்டில் சிறந்த நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்திருந்தது.

இலங்கையர்களின் டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகளிலும், சுகாதாரப் பராமரிப்புத் துறையிலும் நேர்த்தியான தாக்கத்தை ஏற்படுத்தும் இலக்குடன் இயங்கும் eChannelling, தொழில்நுட்பம் மற்றும் திறமை ஆகியவற்றை ஒன்றிணைப்பதில் தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், அதனை உறுதி செய்யும் வகையில் வருமான வளர்ச்சி, தந்திரோபாய பங்காண்மைகளில் அதிகரிப்பு மற்றும் சகல பங்காளர்களுக்கும் பெறுமதியைப் பெற்றுக் கொடுக்கும் திறன்களில் விருத்தியை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியிருந்தது.

2022 ஆம் ஆண்டிலும், அதற்கு அப்பாலும் வளர்ச்சியை எய்தியுள்ள eChannelling, 2022 டிசெம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்திருந்தது. மொத்த வருமானம் ரூ. 221.5 மில்லியனாக பதிவாகியிருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 15% வளர்ச்சியாகும். பெரும்பொருளாதாரச் சவால்கள் நிலவிய காலப்பகுதியிலும் இந்தச் சிறந்த பெறுபேறுகளை எய்தியிருந்தமை விசேட அம்சமாகும். நிலைபேறான, இலாபகரமான வியாபாரம் ஆகியவற்றை வெளிப்படுத்தி, தேறிய இலாபம் ரூ. 65.5 மில்லியனாக அதிகரித்திருந்தது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 23%அதிகரிப்பாகும்.

மேலும், மொத்த சொத்துகள் வளர்ச்சியை நிறுவனம் பதிவு செய்திருந்ததுடன், 2022 டிசெம்பர் 31ஆம் திகதி, இந்தப் பெறுமதி ரூ. 555 மில்லியனாக பதிவாகியிருந்தது. முன்னைய ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 464 மில்லியனாக காணப்பட்டதுடன், 20% வளர்ச்சியை பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. சவால்கள் நிறைந்த சந்தைச் சூழலை பிரதிபலிக்கும் வகையில், eChannelling இன் தொழிற்பாட்டு இலாபம் ரூ. 44.5 மில்லியனாக குறைந்திருந்தது. முன்னைய ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 55.9 மில்லியனாக பதிவாகியிருந்தது. விற்பனை மற்றும் விநியோக செலவுகளில் 39% அதிகரிப்பு மற்றும் நிர்வாகச் செலவுகளில் 32% அதிகரிப்பு ஏற்பட்டமை இதற்கு பிரதான காரணிகளாக அமைந்திருந்தன.

குறுங்கால முதலீடுகளில் நிறுவனம் 13.8% உயர்வை பதிவு செய்திருந்தது. வட்டி வருமானத்தில் வளர்ச்சியைப் பதிவு செய்திருந்ததுடன், அதன் இலாபகரத்தன்மை மற்றும் நிதி உறுதித்தன்மை போன்றவற்றுக்கு அனுகூலமளிப்பதாக அமைந்திருந்தது. தொற்றுப் பரவலின் பின்னரான சூழலில், டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகள் வழங்கலில் தனது செயற்பாடுகளை மேலும் விஸ்தரிக்கும் முயற்சிகளில், தனது சேவை வழங்கல்களை eChannelling பன்முகப்படுத்தியிருந்ததுடன், நவீன டிஜிட்டல் தீர்வுகளினூடாக பொது தனியார் நிறுவனங்களை மாற்றியமைப்பதற்கான ஆற்றலையும் வெளிப்படுத்தியிருந்தது.

நோக்கங்களுடன் மீளமைத்தல் மற்றும் பன்முகப்படுத்தல் போன்றவற்றுக்கமைய, 2022 ஆம் ஆண்டில் eChannelling, வெளி விவகார அமைச்சுடன் வெற்றிகரமாக கைகோர்த்து, ஆவண உறுதிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட முன்பதிவுகளை மேற்கொள்ளும் வசதிகளை வழங்கியிருந்தது. முன்னோடித் திட்டம் எனும் வகையில், இந்தத் தீர்வினூடாக, அத்தியாவசியத் தேவை நிவர்த்தி செய்யப்பட்டதுடன், மக்களுக்கு வலுவூட்டப்பட்டதுடன், சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் காணப்பட்ட சிக்கல் நிலைகளை இல்லாமல் செய்யவும் முடிந்தது. மேலும், டிஜிட்டல் தொழில்நுட்பத்தை ஈடுபடுத்துவதில் தனது ஆற்றலை வெளிப்படுத்தி, eChannelling இனால், உள்நாட்டிலுள்ள அல்லது வெளிநாடுகளில் வசிக்கும் நோயாளர்களுக்கு வைத்தியர்களை ஒன்லைனில் பதிவு செய்து ஆலோசனை பெறக்கூடிய புதிய 'One Touch Tele Channelling ஊடான சேவையும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தது. இந்தச் சேவையினூடாக, நோயாளர்களுக்கு பெருமளவு சௌகரியம் சேர்க்கப்படுவதுடன், தமது இருப்பிடத்திலிருந்தவாறே அவசியமான மருத்துவ ஆலோசனைகளைப் பெறுவதுடன், தமது வாழ்க்கை முறையை மேம்படுத்திக் கொள்ளவும் முடிந்துள்ளது.

இரண்டு தசாப்த கால பயணத்தில், eChannelling அதிகளவு நாடப்படும் டிஜிட்டல் வாழ்க்கைமுறை மற்றும் சுகாதார பராமரிப்பு சேவைகள் வழங்குநரில் முன்னோடியாகத் திகழ்கின்றது. தனது தந்திரோபாய பங்காண்மைகள் மற்றும் புத்தாக்கமான சேவை வழங்கல்கள் போன்றவற்றினூடாக வெற்றிகரமாக செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன், டிஜிட்டல் வாழ்க்கைமுறை சேவைகள் விஸ்தரிப்பினூடாக, eChannelling தனது சேவைகளை மேலும் வியாபித்து, வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற சௌகரியத்தை வழங்குகின்றது.

தேசிய விற்பனை விருதுகள் 2022 இல்

# யூனியன் அஷ்யூரன்சுக்கு கௌரவிப்பு



யூனியன் அஷ்யூரன்ஸ், தேசிய விற்பனை விருதுகள் 2022 இல் உயர் விற்பனை கௌரவிப்புகளை சுவீகரித்திருந்தது. இந்த நிகழ்வு மொனார்ச் இம்பீரியலில் அண்மையில் இடம்பெற்றது. பாங்கசூரன்ஸ் விநியோகப் பிரிவுக்காக அதிகளவு விருதுகளை நிறுவனம் பெற்றுக் கொண்டது. இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தால் (SLIM) சுயாதீனமான முறையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வுகளின் மூலமாக இந்த விருதுகளுக்கான வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

தேசிய விற்பனை முகாமையாளர் பிரிவில் வெற்றியாளராக யூனியன் அஷ்யூரன்ஸ் பாங்கசூரன்ஸ் பிரிவின் உதவி பிரதி தலைவர் தமித விக்கிரமதுங்க தெரிவு செய்யப்பட்டிருந்தார். பாங்கசூரன்ஸ் வலய முகாமையாளரான ஹர்ஷன பெர்னாண்டோ, ஆயுள் காப்புறுதி - பிராந்திய முகாமையாளர்கள் பிரிவில் வெள்ளி விருதை சுவீகரித்திருந்தார். ஆயுள் காப்புறுதி - விற்பனை மேற்பார்வையாளர் பிரிவில் வெண்கல விருது, நிமேஷ ஜயசேகரவுக்கு வழங்கப்பட்டதுடன், ஆயுள் காப்புறுதி - முன்கள செயற்பாட்டாளர்கள் பிரிவில் சண்முகம் மேனகா வெற்றியாளராக தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

பாங்கசூரன்ஸ் பிரிவின் தலைமை அதிகாரி விஷாந்த் விஜேசிங்க குறிப்பிடுகையில், “வெற்றியாளர்களின் அர்ப்பணிப்பு மற்றும் நிபுணத்துவத்தை பாராட்டியிருந்தார். சேவைச் சிறப்பு தொடர்பில் அவர்கள் அதிகளவு கவனம் செலுத்தியிருந்தமையினூடாக, பெருமளவில் அவர்களால் வெற்றிகரமாக இயங்க முடிந்தது. தேசிய விற்பனை செயலணியினரின் நாட்காட்டியில் முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில், அவர்களின் சாதனைகள் கௌரவிக்கப்பட்டு உள்ளமையினூடாக, நிறுவனத்தால் அவர்களுக்கு வழங்கப்படும் சிறந்த பயிற்சிகள் மற்றும் நிபுணத்துவ விருத்தி போன்றன உறுதி செய்யப்பட்டுள்ளன. இதனூடாக அவர்களால் வாடிக்கையாளர்களுக்கு ஒப்பற்ற தீர்வுகள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடியதாகவுள்ளது” என்றார்.

வியாபாரங்களை மேம்படுத்துவது மற்றும் தேசிய பெறுமதியை ஏற்படுத்திக் கொடுக்கும் முன்னணி செயலணியினராக சந்தைப்படுத்தல் பிரிவைச் சேர்ந்தவர்களை திகழச் செய்யும் SLIM இன் நடவடிக்கைகளில் தேசிய விற்பனை விருதுகளும் முக்கிய அங்கம் பெறுகின்றது.

சர்வதேச நியமங்களுக்கமைய விற்பனை நிபுணர்களை கௌரவிப்பது நிறுவனத்தின் நோக்கமாக அமைந்துள்ளதுடன், தெற்காசிய பிராந்தியத்தில் மிகச் சிறந்த விருதுகள் வழங்கும் திட்டமாக கொண்டிருப்பதையும் நோக்காகக் கொண்டுள்ளது.

20க்கும் அதிகமான துறைகளைச் சேர்ந்த சிறந்த செயற்பாட்டாளர்களை இனங்கண்டு அவர்களை கௌரவித்து வெகுமதியளிக்கும் வகையில் தேசிய விற்பனை விருதுகள் அமைந்துள்ளன. தனிநபர்களுக்கு தமது வினைத்திறன்களின் பிரகாரம் தமது நிறுவனங்களினூடாக விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்படுகின்றது. போட்டியின் ஒவ்வொரு பிரிவும் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலம் ஆகிய விருதுகளைக் கொண்டுள்ளதுடன், தேசிய மற்றும் பிராந்திய விற்பனை முகாமையாளர்களுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.

சுயாதீனமான நடுவர் குழாமைக் கொண்டு வெற்றியாளர்கள் தெரிவு செய்யப்படுவதுடன், வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்கள் நடுவர் குழுவில் அடங்கியிருப்பர்.

# ‘மலையகம் 200’








ஆ.ரமேஸ்

‘மலையகம் 200’ வரலாற்றை சிறப்பிக்கும் வகையில் கண்டி சமூக அபிவிருத்தி நிறுவகம், மலையக தமிழர் மரபு ஆகியவை நுவரெலியாவில் ஒழுங்கு செய்திருந்த மூன்று நாள் நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை (19) கோலாகலமாக ஆரம்பமாகி ஞாயிற்றுக்கிழமை (21) வரை மூன்று நாள்கள் நடைபெற்றன.

கண்டி சமூக அபிவிருத்தி நிறுவக நிறைவேற்று பணிப்பாளர் பி.முத்துலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில், மலையக அரசியல் பிரமுகர்கள், சமூக அமைப்புகள், பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளன உறுப்பினர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள், தோட்ட தொழிலாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# தேவாலயம் அபிஷேகம்




மன்னார் - நானாட்டான் பங்கின் பள்ளங்கோட்டை கிராமத்தில் புதிதாக அமைக்கப்பட்ட புனித அந்தோனியார் தேவாலயம் சனிக்கிழமை (20) மாலை 5 மணியளவில், மன்னார் மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், அபிஷேகம் செய்யப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, ஆயரின் 75 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி, கேக் வெட்டி பிறந்தநாளும் கொண்டாடப்பட்டது. பள்ளங்கோட்டை புனித அந்தோனியார் தேவாலயமானது, 2018ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டு அமைக்கப்பட்ட நிலையில் நேற்றைய தினம் (20) அபிஷேகம் செய்யப்பட்டு திறப்பு விழா இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

றொஸாரியன் லெம்பேர்ட்

# கலந்துரையாடல்






திருகோணமலை எழுத்தாணி அமைப்பால், ஊடகவியலாளர்களுக்கும் சமூக மட்ட அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் இடையில் சிறந்த தொடர்பாடலை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தில், தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவில் இயங்கிவரும் விவசாய சங்கப் பிரதிநிதிகள், மாற்றுத் திறனாளிகள் சங்க பிரதிநிதிகள், மாதர் சங்கங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், விளையாட்டுக் கழக பிரதிநிதிகள் ஆகியோருடனான கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை (19) நடைபெற்றது.

இதன் போது பிரதேசத்தில் பணியாற்றும் ஊடகவியலாளர்களை அறிமுகப்படுத்தியதுடன், பொது மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் கேட்டறியப்பட்டது. அதனைத் தொடர்ந்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணரப்பட்டு சம்பந்தப்பட்ட தரப்புக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதில் எழுத்தாணி கலைப் பேரவையின் தலைவர் வடமலை ராஜ்குமார் உட்பட ஊடகவியலாளர்களும் கலந்து கொண்டனர்.

ஹஸ்பர்

# பல்கலைக்கழக மாணவர்களுக்கு நிதியுதவி





வவுனியா, செட்டிகுளம் மகாவித்தியாலயத்தில் இருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவாகிய 13 மாணவர்களுக்கு, செட்டிகுளம் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் இலண்டனில் வசித்து வரும் சிவசுப்பிரமணியம் லோகேஸ்வரன் என்பவரால் தலா ஐம்பதாயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிதியுதவியை வழங்கும் நிகழ்வில், கொடையாளரான சிவசுப்பிரமணியம் லோகேஸ்வரன், அவரது தாயார், வலய கல்வி பணிமனையின் உதவி கல்விப் பணிப்பாளர் விஜயாதாஸ், மற்றும் ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

சுப்பிரமணியம் பாஸ்கரன்

# பெருவிழா நாட்காட்டி காளாஞ்சி



நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த பெருவிழா ஓகஸ்ட் 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ள நிலையில், பெருவிழாவுக்கான ஆலய சூழல் பராமரிப்பு, பக்தர்களுக்கான அத்தியாவசிய தேவைகளை பூர்த்தி செய்தல், வீதி தடைகள் அமைத்து சீரான போக்குவரத்துக்கு வழிசெய்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகளில் ஈடுபடும் யாழ். மாநகர சபைக்கு ஆலய சம்பிரதாய முறைப்படி, சனிக்கிழமை (20) பெருவிழா நாட்காட்டி அடங்கிய காளாஞ்சி ஆலயத்தினரால் கையளிக்கப்பட்டது. இந்த வைபவத்தின் போது, பாரம்பரிய முறைப்படி யாழ். மாநகர சபை வளாகத்தில் வாழை, தோரணங்கள் கட்டி அலங்காரம் சிறப்பாக அமையப் பெற்றிருந்தது.

எஸ். தில்லைநாதன்


மெக்சிக்கோ

# கார் பந்தையத்தில் துப்பாக்கிச்சூடு - 10 வீரர்கள் பலி

மெக்சிகோவின் பஜா கலிபோர்னியா மாகாணம், என்செண்டா நகரில் உள்ள சென் வென்சிட்டி பகுதியில் நேற்றுமுன்தினம் (20) கார் பந்தையம் நடைபெற்றது.

இக் கார் பந்தையத்தில் 50க்கு மேற்பட்ட கார் பந்தைய வீரர்கள் பங்கேற்றனர். மேலும், இப் போட்டியைக் காண நூற்றுக்கணக்கானோர் குவிந்திருந்தனர்.

இந்நிலையில், கார் பந்தையத்தின் போது திடீரென துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. வேனில் வந்த மர்மக் கும்பலொன்றே கார் பந்தைய வீரர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தினர்.



இத் துப்பாக்கிச்சூட்டில் கார் பந்தைய வீரர்கள் 10 பேர் உயிரிழந்தனர். மேலும், 9 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டை தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் தப்பியோடிய கும்பலைத் தீவிரமாகத் தேடி வருகின்றனர்.

## பராக் ஒபாமா உள்ளிட்ட 500 பேருக்குத் தடை



முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உட்பட 500 அமெரிக்க பிரபலங்கள் தங்கள் நாட்டுக்குள் நுழைய ரஷ்யா தடை விதித்துள்ளது.

உக்ரேன் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவுக்கு பொருளாதார நெருக்கடி தரும் விதமாக நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு எதிராக தடை உத்தரவை அமெரிக்க அரசு விதித்து.

மேலும், ரஷ்யாவை எதிர்த்து போரிட உக்ரேனுக்கு, நவீன ஆயுதங்களையும் அமெரிக்கா வழங்கி வருகின்றது.

இது ரஷ்யாவுக்கு எரிச்சலூட்டி வரும் நிலையில், தன் பங்கிற்கு இத்தகைய தடை நடவடிக்கைகளை ரஷ்யா மேற்கொண்டு வருகிறது. அந்தவகையில் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா உட்பட 500 அமெரிக்க பிரபலங்கள் தங்கள் நாட்டிற்குள் நுழைய ரஷ்யா தடை விதித்துள்ளது.

இதில் ஸ்டீபன் கால்பெர்ட், ஜிம்மி கெம்மல், செத் மேயர்ஸ் போன்ற முன்னணி தொலைக்காட்சி பிரபலங்களும் உள்ளடங்குகின்றனர்.

இது குறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'ரஷ்யாவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் ஒவ்வொரு செயற்பாட்டிற்கும் தக்க பதிலடி வழங்கப்படும் என்பதை அமெரிக்கா உணர வேண்டும். தடைக்கு ஆளான நபர்கள் ரஷ்யாவுக்கு எதிரான போலிக் கருத்துகளை பரப்பியுள்ளனர். இதில் உள்ள சிலரின் நிறுவனங்கள் உக்ரேனுக்கு ஆயுதங்கள் வழங்கி வருகின்றன' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

பாகிஸ்தான்

## இம்ரானின் வீட்டில் பதுங்கியிருந்த பயங்கரவாதிகள்



பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கான் வீட்டில் பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாகத் தகவல் கிடைத்ததையடுத்து, நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் அங்கு சோதனை நடத்தினர்.

அண்மையில், இம்ரான் கான் வீட்டில் 40 பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாகவும், அவர்களை 24 மணி நேரத்திற்குள் ஒப்படைக்கும்படியும் அவரது கட்சிக்கு, பொலிஸார் அறிவுறுத்தினர்.

இந்நிலையில், வழங்கப்பட்ட காலக்கெடு முடிவடைந்ததை அடுத்து, லாகூரிலுள்ள இம்ரான் வீட்டில், அதிரடியாக உள்ளே நுழைந்து பொலிஸார் சோதனை நடத்தினர்.

இதன்போது இம்ரானின் வீட்டில் இருந்து தப்பிச் செல்ல முயன்ற 6 பயங்கரவாதிகளை கைது செய்ததாக, லாகூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெலுங்கு

## வெடிகுண்டு கொள்ளையனுக்கு காத்திருந்த அதிர்ச்சி




நபர் ஒருவர் வெடிகுண்டுடன் வங்கியொன்றுக்கு கொள்ளையடிக்கச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம், மேட்ச்சல் மாவட்டத்தில் உள்ள ஜி டி மெட்லா நகரிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தன்று வங்கிக்குள் புகுந்த குறித்த நபர், சினிமாவில் காண்பிக்கப்படுவது போன்ற போலி வெடிகுண்டு ஒன்றை உடலில் கட்டிக் கொண்டு உள்ளே சென்றுள்ளார்.

தனக்கு உடனடியாக இரண்டு இலட்ச ரூபாய் பணம் தேவைப்படுவதாகவும் கொடுக்க தவறினால் குண்டை வெடிக்க செய்து விடுவேன் என்றும் மிரட்டல் விடுத்துள்ளார்.

இதனைக் கேட்டு முதலில் அதிர்ச்சி அடைந்தாலும், பார்ப்பதற்கு போலி வெடிகுண்டு போல இருந்ததால் உஷாரான வங்கியில் இருந்த வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் குறித்த நபரை மடக்கி பிடித்து தர்ம அடிகொடுத்துள்ளனர்.

பின்னர் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இதையடுத்து அங்கு வந்த பொலிஸார், குறித்த நபரைப் பிடித்து விசாரித்ததில், "அவரது பெயர் சிவாஜி என்பதும் அவர் பல்வேறு நிறுவனங்களில் கிரேன் ஆபரேட்டராக வேலை செய்து விட்டு, தற்போது பார்வை கோளாறு காரணமாக பாதிக்கப்பட்டு பணம் இல்லாமல் அவதிப்பட்டு வருகின்றார் என்பதும் தெரியவந்துள்ளது.

அத்துடன், சுலபமாக பணம் சம்பாதிக்க முடிவு செய்தே இவ்வாறு வங்கியில் கொள்ளையிட முயற்சி செய்ததாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் அந்நபரை கைது செய்துள்ள பொலிஸார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி, சிறையில் அடைத்தனர்.

பாகிஸ்தான்

## ட்ரோன் மூலம் போதைப்பொருள் கடத்தல்

ட்ரோன் மூலம் போதைப் பொருட்கள் கடத்தப்பட்ட சம்பவம் இந்திய- பாகிஸ்தான் எல்லையில் இடம்பெற்றுள்ளது.

பாகிஸ்தானில் இருந்து இந்திய வான்வெளிக்குள் ஊடுருவிய குறித்த ட்ரோனை பஞ்சாப் மாநிலம் அமிர்தசரஸ் பகுதியைச் சேர்ந்த எல்லைப் பாதுகாப்புப் படையினர் சுட்டு வீழ்த்தியுள்ளனர்.

இதன்போது அதில் போதைப் பொருள்கள் இருந்துள்ளமை தெரியவந்துள்ளது. இந்நிலையில் கடந்த இரண்டு நாள்களில் சுட்டு வீழ்த்தப்பட்ட நான்காவது ட்ரோன் இதுவென்றும் பாதுகாப்பு படையினர் தெரிவித்துள்ளனர்.



ஜப்பான்

## ஜப்பானில் மகாத்மா



ஜப்பான் சென்றுள்ள இந்திய பிரதமர் மோடி, நேற்று முன்தினம் ஹிரோஷிமா நகரில் உள்ள மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையை திறந்து வைத்தார்.

ஜி7 உச்சிமாநாட்டில் பங்கேற்க ஹிரோஷிமா சென்றுள்ள பிரதமர் மோடி, ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிதாவை சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது ஜப்பானிய உயர்தொழில்நுட்பம், திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றை பகிர்ந்து கொள்வது மற்றும் இரு நாடுகளுக்கும் இடையிலான வளர்ச்சித்திட்டங்கள் குறித்தும் இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை நடத்தினர்.

இதையடுத்து ஹிரோஷிமா நகரில் உள்ள மகாத்மா காந்தியின் மார்பளவு சிலையையும் பிரதமர் மோடி திறந்து வைத்தார்.

இதன்போது அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வலியுறுத்தும் காந்திய கொள்கைகள், உலகளவில் கோடிக்கணக்கானோருக்கு வலிமையைத் தருவதாக பிரதமர் மோடி கூறினார்.




# சம்பியன்ஸ் லீக்: வெளியேற்றப்பட்ட நடப்புச் சம்பியன்கள்

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரில் இருந்து நடப்புச் சம்பியன்களான றியல் மட்றிட் வெளியேற்றப்பட்டுள்ளது.

தமது மைதானத்தில் நடைபெற்ற இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றியுடனான முதலாவது சுற்று அரையிறுதிப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமன் செய்திருந்த ஸ்பானிய லா லிகா கழகமான மட்றிட், அவ்வணியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்று அரையிறுதிப் போட்டியில் 0-4 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்து, 1-5 என்ற மொத்த கோல் கணக்கிலேயே தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தது.

சிற்றி சார்பாக பெர்ணார்டோ சில்வா இரண்டு கோல்களையும், மனுவல் அகஞ்சி, ஜூலியன் அல்வரேஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



## ஐ.பி.எல்: பஞ்சாப்பை வென்ற டெல்லி

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரில், தரம்சாலாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸுடனான போட்டியில் டெல்லி கப்பிட்டல்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பஞ்சாப்

டெல்லி: 213/2 (20 ஓவ. )
(துடுப்பாட்டம்: றைலி றொஸோ ஆ.இ 82 (37), பிறித்திவி ஷோ 54 (38), டேவிட் வோர்னர் 46 (31), பில் ஸோல்ட் ஆ.இ 26 (14) ஓட்டங்கள். பந்துவீச்சு: சாம் கர்ரன் 2/36 [4], ராகுல் சஹர் 0/35 [4])

பஞ்சாப்: 198/8 (20 ஓவ.)
(துடுப்பாட்டம்: லியாம் லிவிங்ஸ்டோன் 94 (48), அதர்வா டைடே 55 (42) ஓட்டங்கள். பந்துவீச்சு: கலீல் அஹ்மட் 1/20 [3], குல்டீப் யாதவ் 0/21 [3], அன்றிச் நொர்கியா 2/36 [4], அக்ஸர் பட்டேல் 1/27 [3])

போட்டியின் நாயகன்: றைலி றொஸோ

இந்நிலையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸை கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

## கல்முனையில் KPL கிரிக்கெட் சுற்றுப்போட்டி ஆரம்பம்






■ வி.ரி. சகாதேவராஜா

நற்பிட்டிமுனை சூப்பர் ஸ்டார் விளையாட்டு கழகம் வருடாந்த நடத்திவரும் கேபிஎல்( KPL) எனும் மாபெரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டி, கல்முனை உவெஸ்லி மைதானத்தில் ஆரம்பித்து சனிக்கிழமை (20) வைக்கப்பட்டது.

கழகத் தலைவர் ரி.கமல்ராஜ் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் கல்முனை வடக்கு பிரதேச செயலாளர்

ரிஜே. அதிசயராஜ் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த போட்டியில் கல்முனையின் பத்து பிரபலமானமான அணிகள் கலந்து கொள்கின்றன. எதிர்வரும் ஜூன் மாதம் பத்தாம் திகதி இறுதிப்போட்டி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

அணிக்கு 12பேர் கொண்ட 10 ஓவர் கடின பந்து கிரிக்கெட் சுற்றுபோட்டி லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றது .

முதலாவது போட்டியில் பிரபல கழகமான ஜெகநாத்தின் ஈஸ்டர்ன் ரோயல் அணியும், எஸ் பி ஜி அணியினரும் மோதிக்கொண்டன.

### லோவர்கிரண்லி தமிழ் வித்தியாலயத்தில்

## கபடி, சதுரங்கம் ஆரம்பிக்கப்பட்டன

■ பி. கேதீஸ்




நுவரெலியா கல்வி வலயத்துக்குட்பட்ட லோவர்கிரண்லி தமிழ் வித்தியால மாணவர்களுக்கு யுனிசெப் வேலைத்திட்டத்தின் கீழ் கபடி, சதுரங்கம் ஆகியன ஆரம்பிக்கப்பட்டன.

# பயேர்ண் மியூனிச்சிலே தொடர விரும்பும் மனே?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான சாடியோ மனே, சக முன்களவீரரான லெரோய் சனேயுடனான மோதலுக்கு மத்தியிலும் அக்கழகத்திலேயே தொடர விரும்புவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான செல்சிக்கு மனே செல்வார் எனக் கூறப்பட்டிருந்தது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 22 மே 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.